**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.50
https://ngmtamil.in/

# பண்டைத்தமிழரின் விருந்தோம்பல் பண்பு

**கு.பாக்கியலட்சுமி ,**

உதவிப் பேராசிரியர், தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, மலுமிச்சம்பட்டி, கோயமுத்தூர்-50.

**ஆய்வுச்சுருக்கம்**

இல்லறம் அல்லது நல்லறமன்றது என்று ஔவையார் வாக்கிற்கிணங்க இல்லறத்தில் ஓம்பும் விருந்தோம்பல் என்ற சிறந்த அறமானது தமிழர் பண்பாட்டின் அடையாளமாகவும் திகழ்கிறது. இவ்வுயர்ந்த அறத்தை சங்க இலக்கியங்களில் மிகச்சிறந்த அறமாக போற்றியதை அறியமுடிகிறது. அன்பின் வெளிப்பாட்டில் மலர்ந்த பகுத்துண்ணும் சிறந்த பண்பானது ஜீவகாருண்யாக மலர்ந்து சிறந்து வளர்கிறது.

**முன்னுரை**

பண்டைத்தமிழர் பண்புகளில் ஒன்றான விருந்தோம்பல் பண்பானது காலம்காலமாக வந்துகொண்டும் வளர்ந்து கொண்டும் இருக்கிறது. வந்த விருந்தினரைப் பேணியும், இனி வரும் விருந்தினர்க்காக காத்திருக்கும் பண்பாளனை, தேவர்கள் விரும்பும் நல்ல விருந்தினன் என்கிறார் வள்ளுவர் இதனை,

**“செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல் விருந்து வானத்தவர்க்கு”**

**(குறள் - 86)**

என்ற குறளின் வாயிலாக அறியமுடிகிறது. அவ்வகையில் விருந்தோம்பும் தன்மையை சங்க இலக்கியத்தில் பல இடங்களில் காணமுடிகிறது. பக்கவரையறை காரணமாக சுருக்கமான முறையில் இக்கட்டுரை ஆய்வு அமைகின்றது.

**புதுமை - விருந்து**

புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் சுயநலமாக வாழ்வோரை உருவகமாகச் சித்தரிக்கிறார். "தன்பெண்டு தன்பிள்ளை, சோறு, வீடு சம்பாத்தியம்" என்று வாழ்வோரை "கடுகுபோல் உள்ளம் கொண்டோன்" என்கிறார். அவ்வாரில்லாமல் பிறர்க்கும் கொடுத்து வாழும் பண்பை குடும்பத்தில் தொடங்கவேண்டும். இளைய சமுதாயமும் அதனைக்கண்டு பழக்கம் கொள்ளும். பிறர் என்றால் சுற்றமா? குடும்பமா? சொந்தமா? என்றால் இல்லை புதிதாக வருபவர்களே விருந்தாளி என்போர் ஆவார். இதனை தொல்காப்பியர் கூறும் பொழுது,

**“ விருந்தே தானும் புதுவது கிளந்த யாம்பின் மேற்றே.”**

**(தொல் -281)**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

என்ற நூற்பாவால் உணர்த்துகிறார். கழக அகராதியிலும் விருந்து என்ற சொல்லிற்கு "புதுமை - உணவளித்துப் போற்றுதல்" என்றே விளக்கம் தருகிறது.

எனவே, விருந்து என்ற சொல் ‘புதுமை’ என்ற பொருள் தந்தும், அது உற்றார், உறவினர் சுற்றம் விடுத்து அறிமுகமில்லாத முன்பின் அறியாதவராகத்தான் குறிக்கும் என்பதை அறியமுடிகிறது.

**விருந்தின் தோற்றம்**

காலமாற்றத்தில் மனிதன் மாறிய போது 'பகுத்துண்ணும்’ பண்பு வந்திருப்பதை, “மனிதன் காட்டுமிராண்டி நிலையைவிட்டு நாகரிக நிலைக்கு மாற்றம் பெற்ற காலத்தில் விருந்து தோன்றியிருக்கலாம் என்றும் இச்செயல் நடைபெற பொருள் இன்றியமையாதது” என்று ஏகாம்பரம் கூறியுள்ளதால் அறியலாம்.

காலநிலை மாற்றத்தால் கூடிவாழ்ந்த மனிதன் தனது விலங்கின நிலையிலிருந்து மாறிய காலத்தில் விருந்து என்றதன்மை தோன்றியது என்பதை அறியமுடிகிறது.

**பகுத்துண்ணும் பண்பாளர்**

காதல், வீரம், கொடை மட்டுமில்லாமல் இல்லற அறங்களுள் ஒன்றான விருந்து ஓம்புதலை சிறப்பித்துக் கூறுகின்றன. சங்க இலக்கியம் நூல்கள், பண்டைத் தமிழர் நூல்களில் விருந்து என்ற உன்னத அறத்தை பேசாத இலக்கியங்கள் இல்லை திருவள்ளுவரும் விருந்தோம்பலுக்கு தனியாக ஒர் அதிகாரத்தைப் படைத்துள்ளார்.

**“ இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி**
**வேளாண் செய்தல் பொருட்டு ”**

**( குறள் - 81)**

தம்பதியர்களாக இணைந்து வாழும் குடும்ப வாழ்வானது, தன்னிடத்தில் வருகின்ற விருந்தினர்களை உபசரிக்கவே என்கிறார் திருவள்ளுவர் குறைந்த அளவு உணவாயினும் அதனை தன்னுடையது, பிறர்க்கில்லை எனப் பாராமலும், தனித்து உண்ணாமலும் பிறர்க்குக் கொடுக்கும் பெருந்தன்மை வாய்ந்தவர்களால் இவ்வுலகம் உள்ளது. இதனை,

**“உண்டாலம்ம இவ்வுலகம், இந்திரர்**
**அமிழ்தம் இயைவ தாயினும், இனிது எனுத்**
**தமியர் உண்டலும் இலரே”**

**(புறம் -182 பா)**

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பாடுவதால் பகுத்துண்ணும் பண்பினைப் பெற்றவர்கள் முன்னோர்கள் என்பதை அறியமுடிகிறது.

**விருந்தோம்பல்**

சங்ககால மக்கள் நிலம்சார்ந்து வாழ்ந்தவர்கள். அவர்கள் தங்கள் நிலத்தில் விளையும் தானியங்கள். இயற்கையாக கிடைக்கும் கிழங்கு, தேன் இவற்றை உண்டு வாழ்ந்தனர். விருந்தினர்களுக்கும் அதனையே பகிர்ந்தளித்தனர் இதனை,

**“பரூஉக்குறை பொழிந்த நெய்கான் வேலையோடு**
**குரூஉக்கண் இறடி பொம்மல் பெறுகுவீர்.”**

**(மலை.கடாம்-168-169)**

நன்னனின் மலையில் தினைச் சோறும், நெய்யால் வறுத்த இறைச்சியும் உண்டார்கள்; விருந்தினர்க்கும் அதனையே கொடுத்து மகிழ்ந்தனர் என்பதை அறியமுடிகிறது.

மன்னர்களும், சிற்றரசர்களும் தங்களின் தகுதிக்கேற்ப விருந்தினர்க்கு விருந்தளித்தனர். கரிகால் பெருவளத்தான் பொருநர்க்குத் உணவளித்த செய்தியை,

**“ கொல்லை உழு கொழு ஏய்ப்ப பல்லே**

**எல்லையும் இரவும் ஊன் தின்று மழுங்கி.”**

**(பொருந - 117-118)**

என்று பாடுகிறார் முடந்தாமக்கண்ணியார் என்ற புலவர். சுடசுடச் இறைச்சியை கொடுத்து சாப்பிடச் செய்தான் பெருவளத்தான். அப்படிச் சாப்பிடும்போது வாயுக்குள் போன இறைச்சி சூடுதாங்காமல் வடக்கும் தெற்கும் மாற்றி மாற்றி வைக்க, சூட்டோடு கடித்ததால் பொறுக்காத பற்கள் கொல்லையை உழும் கொழு (ஏர்) உழுது உழுது மழுங்கிவிடுவது போல் மழுங்கிவிட்டது என்று. விருந்தின் சிறப்பைப் பேசும் பாடலாக அமைகிறதை அறியமுடிகிறது.

**விருந்து வர வேண்டல்**

முன்னோரையும், நடுகல்லையும் வணங்கும் பெண் ஒருத்தி, விருந்து வர வேண்டும் என வேண்டுகிறாள். இதனை,

**"நடுகல் கைதொழுது பரவும், ஒடியாது**
**விருந்து எதிர் வழுகதில் யானே"**

**(புறம் - 306)**

என்ற பாடல்வழி விருந்து வரவேண்டும் என்றும், அவ்வாறு வந்தால் போருக்குச் சென்ற தலைவன் திரும்பி வருவான் என்ற நம்பிக்கையும் இப்பாடலில் இருப்பதை அள்ளூர் நன்முல்லையார் வாயிலாக அறியமுடிகிறது. காக்கைப் பாடியாரும் குறுந்தொகைப் பாடல் ஒன்றில் தலைமகனைப் பிரிந்த தலைமகள் வருந்திய போது வீட்டின் முன் காகம் கரைகிறது. தலைவன் வருவான் என்பதனைக்கூறி தோழி தலைவியை தேற்றுகிறாள். காகத்திற்கு ஏழுகலத்தில் உணவளிப்பதாகவும் கடறுகிறாள். இதனை,

**"விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே"**

**(குறுந் - 210)**

என்றபாடல் வாயிலாக அறியமுடிகிறது.

**விருந்திற்கேது காலம் நேரம்?**

விருந்தினர் இரவு நேரத்திலும் வருவதுண்டு. இரவுப் பொழுதில் வந்த விருந்தினர்க்கு நெய்விட்டு பொரித்த இறைச்சியை சமைத்தாள் தலைவி. அவளின் நெற்றியில் வியர்வைத்துளி அரும்பின. புகையால் வியர்வை வழிந்தோடியன இதனை,

**“எல்லிவந்த நல்லதை விருந்திற்கும்**

**கிளரிழை அரிவை! நெய்துழந்து அட்ட**
**விளர் ஊன் அம்புகை எறிந்த நெற்றிச்**
**சிறுநுண் பல்வியர் பொறித்த**
**குறுநடை கூட்டம் வேண்டு வோரே"**

**(நற் - 41)**

என்ற பாடல் வாயிலாக விருந்தினர் எந்நேரமும் வருவர்கள், அவர்கள் வந்தாலும் சமைத்துப் பறிமாறிய தன்மையை நற்றிணை வாயிலாக அறியமுடிகிறது. கௌதமனார் பாடிய பாடலிலும் விருந்தினர்க்கு உணவளித்து உபசரித்த, பல்யானை செல் கெழுகுட்டுவன் ஊரில் எப்போதும் ஆவுதி என்னும் புகை மூட்டம் காணப்படும் என்கிறார் இதனை,

**"வருநர் வரையார் வாரவேண்டி**
**விருந்துகண் மாறாது உண் இய பாசவர்**
**ஊனத்து அழித்த வானிணக் கொழுங்குறை,**
**குய்யிடு தோறும் ஆனாது ஆர்ப்பக்**
**கடல் ஒலி கொண்டு செழுநகர் நடுவண்**
**அடுமை எழுந்த அடுநெய் ஆவுதி "**

**(பதிற்று 18-13)**

என்ற பாடல் வாயிலாக அறியமுடிகிறது. இப்பாடலில் எப்போதும் விருந்தினர் வந்தவண்ணமே இருக்கும் குட்டுவனின் ஊரில் இறைச்சியை நெய்யிட்டு பொரிக்கும் போது கடல் ஒலி போன்ற ஓசையும் அதனால் எழக்கூடிய ஆவுதிப் புகையும் அவ்விடம் முழுவதும் உலவியதை அறியமுடிகிறது.

**விருந்தினரை வழியனுப்பும் முறை**

வந்த விருந்தினர்க்கு பரிசு, உணவு, போன்ற தேவையான பொருட்களையெல்லாம் தந்தளித்து விருந்தினர் விடைபெற்றுச் செல்லும் போது ஏழடி சென்று வழியனுப்ப வேண்டும். இதனை கரிகாலன் தன்னை நாடி வந்த விருந்தினர்களை வரவேற்று உபசரித்து அவர்களை வழியனுப்ப ஏழடி வந்து வழியனுப்பினான் என்பதை,

**"காவின் ஏழு அடி பின் சென்று**
**கோல் இன்தாறு காளையது ஏது"**

**(பொருந-166)**

என்ற பொருநர் ஆற்றுப்படை வாயிலாக அறிய முடிகிறது.

**விருந்தினர் முகன்மன்**

திருவள்ளுவர் விருந்தினரை அனிச்சமலருக்கு ஒப்பாகக் கூறுவார்.

**"மோப்பக்குழையும் அனிச்சம் முகம் திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து"**

**(குறள்-70)**

அனிச்சம் என்ற மலர் மென்மையானது . அது நுகர்ந்தவுடன் வாடிவிடும் தன்மையானது விருந்தினரும் அனிச்ச மலருக்கு ஒப்பானவர்களே ஆவர். அவர்கள் முகமாறுபாடாய் பார்த்தாலே விருந்துகுழையும். அன்புடனும் ஆர்வத்துடனும் விருந்தளித்தல் வேண்டும் என்பதை திருவள்ளுவர் வழி அறியமுடிகிறது. ஏலாதியிலும் விருந்தினரை உபசரிக்கும் முறையைப் பேசுகிறது.

**“இன்சொல் அளாவல், இடம் இனி ஊண் யாவர்க்கும்**
**வன் சொல் களைந்து, வருப்பானேல் - மெனிசொல்**
**முருந்து ஏய்க்கும் முள்போல் எயிற்றினாய்! நாளும்**
**விருந்து ஏற்பர், விண்ணோர் விரைந்து.”**

**(ஏலாதி-7)**

இப்பாடல், விருந்தினரை மென்மையாகவும், உளமாற இன்பமாக பேசியும், தங்குவதற்கு இடம், ஆடை அணிகலன்கள் அளித்தும் வரவேற்க வேண்டும் என்கிறது. அவ்வாறு வரவேற்போமானால் நம்மை தேவலேகத்தில் விருந்தினராகச் செல்ல தகுதி படைத்தவர்கள் ஆகிவிடுவார்கள் என்று விளக்குவதால் விருந்தினர்களைப் பேணும் முறையை அறியமுடிகிறது. இக்கருத்தினை வள்ளுவரும்.

**“செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத்த வர்க்கு”**

**(குறல் -86)**

என்று குறிப்பதால் அறியமுடிகிறது.

**கண்ணகியின் துயர்**

கோவலன் கண்ணகியிடம் மீண்டும் (திருந்தி) திரும்பி வந்த போது கண்ணகி கண்கலங்கினாள். ஏனெனில், தன்னோடு கோவலன் இருந்தால், செய்வேண்டிய அறங்கள் செய்திருக்கலாம், என்றும் செய்ய வேண்டிய அறங்கள் செய்யாமல் போய்விட்டது என்றும் வருந்தினாள், இதனை,

**“அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்.**
**துறவோர் கெதிர்த்தலும் தொல்லோர் சிறப்பில்**
**விருந் தெதிர் கோடலும் இழந்த என்னை”**

**(சிலம்-கொலை 73- 75)**

என்பதால் விருந்தினர்களை ஓம்புதலை தாலையாயக் கடமையாக முன்னோர்கள் கடைபிடித்திருப்பதை அறியமுடிகிறது. பெண்களுக்கே விருந்தோம்பல் தன்மை உரியது என்பதை தொல்காப்பியத்தில் குறிக்கப்பட்டுள்ளது. ஆணும் பெண்ணும் தனித்து இருந்தால் விருந்து நடைபெறாது இதனை,

**“கற்பும் காமமும் நற்பாலொழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும்**
**வல்லிதின் விருந்து புறந்தருதலும் அற்றம்**
**பிறவும் அன்ன கிழவோர் மாண்புகள்.”**

**(தொல்-பொரு. கற்-11)**

எனும் நூற்பா வழி அறியமுடிகிறது.

**கடும்பசி ஆகும் விருந்தினர்க்கு**

விவேக சிந்தாமணி எனும் நூலில் விருந்து உபசரிக்கும் முறையை,

**“ஒப்புடன் முகமலர்ந்தே உபசரித்து உண்மைபேசி**
**உப்பிலா கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்**

**முப்பழமொடு பாலன்னமும் முகம்கடுத்து இடுவாராயின்**
**கப்பிய பசியினொடு கடும்பசி ஆகும்தானே..”**

**(வி - சி.4)**

இப்பாடல், விருந்தினர்களை முகத்தில் புன்னகை கொண்டு வரவேற்று, உபசரித்து உப்பில்லாத கூழை உணவாகக் கொடுத்தாலும் அது உண்பவர்களுக்கு சாவா மருந்தாகிய அமுதம் போல ஆகும். அவ்வாறு இல்லாமல் மா, பலா, வாழை என்றும் முக்கனிகளையும், உயர்ரக அரசி கொண்டு சமைத்த உணவானாலும் முகத்தில் எள்ளும் கொல்லும் வெடிக்க உதட்டில் இனிய சொல் சொல்லாமல் உணவுதந்தால் அதனை உண்பவர்க்கு பசி அதிகமாகும். பசி குறையாது மிகும், என்கிறது.

இதனால் அன்போடும், முகமலர்தலோடும் விருந்தினை எதிர் கொள்ளவேண்டும் என்பதை அறியமுடிகிறது.

**முடிவுரை**

அறமெனும் பண்பை விருந்தோம்பல் வாயிலாக வளர்ந்தெடுத்த இல்லற மாண்பானது பண்டைய தமிழர்கள் மூலம் இன்றுவரை வளர்ந்து வந்துள்ளது. இந்நறப்பண்பை சங்கநூல்கள் வாயிலாக சிறப்பாக அறிந்து கொள்ள முடிகிறது.

**சுருக்கக் குறியீடு**

**குறள். - திருக்குறள்.**
**தொல். - தொல்காப்பியம்.**
**புறம். - புறநானுறு.**
**மலை.கடா. - மலை படுகடாம்.**
**பொருநா. - பொருநராற்றுப்படை.**
**குறுந். - குறுந்தொகை.**
**பதிற். - பதிற்றுப்பத்து.**
**நற். - நற்றிணை.**
**ஏலாதி. – ஏலாதி.**
**சிலம். - சிலப்பதிகாரம்.**
**கெலை. - கொலைகளக்காதை.**
**தொல்.பொரு.கற். - தொல்காப்பியம் – பொருளதிகாரம் - கற்பியல்.**
**வி.சி. - விவேகசிந்தாமணி.**

**துணைநூற்பட்டியல்**

[1.] **ஏகாம்பரம், ஆ.** *தமிழரின் விருந்தோம்பல்*. இலக்கியா, 2003.

[2.] **கனக சுப்புரத்தினம், இரா.** *திருக்குறள் உணர்வுறை*. அறிவு நிதி பதிப்பகம், 2000.

[3.] **கதிர் முருகு (உ.ஆ).** *விவேக சிந்தாமணி*. சாரதா பதிப்பகம், 2000.

[4.] **கு. சுந்தரமூர்த்தி (ப.ஆ).** *தொல்காப்பியம்-பொருளதிகாரம் (இளம்பூரணர் உரை)*. நக்கீரர் கழகம், 1979.

[5.] **சிங்காரவேலு முதலியார்.** *அபிதான சிந்தாமணி*. ஏசியன் எஜிகேசன் வெளியீடு, 1979.

[6.] **பாரதிதாசன், பாவேந்தர்.** *பாரதிதாசன் கவிதைகள்*. மணிவாசகர் பதிப்பகம், 2002.

[7.] **புலியூர் கேசிகன் (உ.ஆ).** *நற்றிணை, புறநானூறு, கலித்தொகை, பொருநர் ஆற்றுப்படை*. சாரதா பதிப்பகம், 2009.

[8.] **புலியூர் கேசிகன் (உ.ஆ).** *பதிற்றுப்பத்து, பரிபாடல்*. கங்கை புத்தக நிலையம், 2010.